[1977 சூலை 8

கட்சிப் பற்றற்று தோழமை முறையில் அமைந்திருக்குமென உறுதி கூறியுள்ளதை வரவேற்கிறோம். எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங் கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில், தமிழ் நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ் நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவிசாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம். இந்திய யூனியனின் பொருளாதார அமைப்பை வலுப்படுத்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படுமென்று பாரத பிரதமர் உறுதியளித்திருப்பதையும் வரவேற்கிறோம். மாநிலங்களையும் வலுப்படுத்திஞல்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ்நாட்டினை வளங்கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்.

6. அண்டை மாநிலங்களுடன் நமது உறவுகள், குறிப்பாக, குடிதண்ணீர், பாசன, மின் வசதிகளைப் பொறுத்தவரை, பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில், நல்லவிதமாகத் தொடர்ந்து பேணப்பட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, கடந்த காலத்தில் இந்த உறவுகள் எப்போதும் சீராக இருந்தன என்று சொல்ல முடியாது. நல்லெண்ணம், புரிந்து கொள்ளும் தன்மை, பொதுப் பயன் இவற்றின் அடிப்படையில் இந்த உறவைப் பேணி வளர்ப்பது எனது அரசின் கொள்கையாக இருக்கும்.

7. அமரர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கிய, இப்பேரவையால் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப் பட்ட, இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதே எனது

அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும். இந்த இரு மொழிக் கொள்கை தமிழ்நாட்டு மக்களில் விருப்பத்தை அப்படியே பிரதிபலிக்கிறது. எல்லாவகையிலும் தமிழை வளர்க்கச் சிறப்பு நாட்டம் செலுத்துவோம். பிற மாநிலங்களில் தமிழ் பயிலுவதற்கு ஊக்க உதவி அளிக்கப்படும். தமிழ் இலக்கியம், கலை, வரலாறு, தொல்பொருள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அவசியமான நிதி ஒதுக்கப்படும். பிற மொழிகளில் வெளிவந்துள்ள பண்டைய இலக்கியங்களையும், பல்வேறு துறைகளிலும் வந்துள்ள தற்கால நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி செய்யும்.

8. இப்போது முடிவடைந்துள்ள விவசாய ஆண்டு, தமிழ் நாட்டு மக்களுக்கு கவலையளித்துள்ளது. நீர்கோள் பகுதிகளில் தென்மேற்குப் பருவக்காற்றின் மூலம் போதுமான மழை பெய்யவில்லை. மேலும், காவிரிப் பகுதிகளில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. இருப்பினும், இதனால் விளையக்கூடிய உற்பத்திக் குறைவைத் தடுக்கும் வகையில் வேளாண்மைத்துறை உரிய நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளுக்கு விழிப்புணர்ச்சியும், செயல்திறனும்கொண்ட விவசாயப் பெருமக்கள் இம் மாநிலம் முழுவதிலும், சிறப்பாகக் காவிரி கழிமுகப் பகுதிகளில் ஒத்துழைப்பு நல்கியது குறிப்பிடத்தக்கது. அடுத்து வரும் பயிரிடு காலத்தில், விவசாய மக்களுக்குப் பாசன வசதி, போதிய அளவிலும் உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம்.

9. தமிழ்நாட்டின் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் பற்றாக்குறை ஏதும் ஏராது என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப அரிசி கையிருப்பும் போதுமானதாக உள்ளது. தனியார் கடைகளில் அரிசி பெரும்பாலும் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கிறது. புன்செய் தானிய வகைகளும் நியாயமான விலையில் கிடைக்கும் நிலை இருக்கிறது. கடலை எண்ணெய் போன்ற சமையல் எண்ணெய் வகைகளில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றம் கவலைக்கிடமாக உள்ளது. இந்த விலைவாசி நிலையை அரச